தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 19, பிரஜோற்பத்தி — திருவள்ளுவர் ஆண்டு 2023

1992, ஏப்ரல் 1, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.''

கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்குத் தக்கவாறான நெறியில் நிற்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 416, டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

416—

தமிழக அரசு பங்கு மார்க்கெட்டில் நுழைதல்.

*9402— டாக்டர் வெ. புருஷோத்தமன் :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிதி ஆதாரங்களை பெருக்கும் பொருட்டு பங்கு மார்க்கெட்டில் நுழையும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா ?

(ஆ) மத்திய அரசு சில துறைகளுக்கு பங்கு பத்திரங்களை வெளியிட்டது போல், தமிழக அரசும் சில துறைகளுக்கு/ இனங்களுக்கு அதுபோன்ற பங்கு பத்திரங்களை வெளியிடும் செயற்குறிப்பு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) : விவர அறிக்கை அவைமுன் தனியாக வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

ஆம். இங்கு துறை என்று கூறப்படுவது அரசு பொது நிறுவனங்களைக் குறிப்பிடுகிறது என்று கருதப்படுகிறது. மத்திய அரசு தனது பொதுத்துறை நிறுவனங்களின் சிலவற்றின் பங்குகளை பொது நிதி நிறுவனங்களுக்கு (Mutual Funds) விற்றிருக்கிறது. இதற்காக பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை பங்கு மாற்று அலுவலகத்தில் (Stock Exchange) பதிவு செய்யவும் அனுமதி வழங்கியுமிருக்கிறது. தமிழக அரசு சில பொதுத்துறை நிறுவனங்களின் சிறிதளவு பங்குகளை பங்கு மாற்று அலுவலகத்தில் (Stock Exchange) பதிவு (leist) செய்வதற்கும், அப்படி பதிவு செய்யும் பங்குகளை பொது நிதி நிறுவனங்களுக்கு (Mutual Funds) விற்பதற்கும் மத்திய அரசிடம் அனுமதி கோரலாம் என்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அறிவித்துள்ள புதிய தொழில் கொள்கையின் காரணமாக, பொருளாதாரத் திட்டத்தின் காரணமாக மக்கள் தங்கம் மூலமாகவும், வெள்ளி மூலமாகவும், நிலத்தின் மூலமாகவும், வங்கிகள் மூலமாகவும் பணத்தை முடக்காமல் பங்கு மார்க்கெட்டிலேயே ஏராளமான பணத்தை முடக்கியிருக்கிறார்கள். இதன் மூலமாக 10 ஆயிரம் கோடி ரூபாய் உள்நாட்டிலிருந்து வர இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து என். ஆர். ஐ. மூலமாக 10 ஆயிரம் கோடி ரூபாய் வர இருக்கிறது என்று ஒரு புள்ளிவிவரம் அரசின் மூலமாக வெளியிடப்பட்டுள்ளது. மொத்தம் 20 ஆயிரம் கோடி ரூபாய் வர இருக்கிறது. தமிழ்நாட்டுக்கு மட்டும் அதன்மூலம் 3 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து 5 ஆயிரம் கோடி ரூபாய் வரை வர இருக்கிறது. ஆகவே, இந்த நிதிப்பற்றாக்குறையுள்ள இந்த சமயத்தில் ஏற்கெனவே நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற நம்முடைய நிறுவனங்களுக்கு பங்குத் தொகைகளை பங்குப் பத்திரங்களை மியூச்சுவல் பண்ட்ஸ் மூலமாக வெளியிட்டால் ஏராளமான பணம் கிடைக்கும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன். மேலும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஒருமுறை 'அறிய விரும்புகிறேன்' போதும். அடுத்ததைப் பிறகு கேட்கலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா இங்கே பொது நிறுவனங்களைப்பற்றிதான் குறிப்பிடுகிறது. மத்திய

1992 ஏப்ரல் 1]

அரசு தன்னுடைய பொதுத் துறை நிறுவனங்கள் சிலவற்றின் பங்குகளை பொது நிறுவனங்களுக்கு மியூச்சுவல் ஃபண்டுக்கு விற்றிருக்கிறது. இதற்காக பொதுத் துறை நிறுவனங்கள் பங்குகளை பங்கு மாற்று அலுவலகத்தில், ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்யவும் மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அதைப்போன்று தமிழக அரசு சில பொதுத்துறை நிறுவனங்கள் சிறிதளவு பங்குகளைப் பங்கு மாற்று அலுவலகத்தில், ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்வதற்கும், அப்படி பதிவு செய்த பங்குகளைப் பொது நிறுவனங்களுக்கு மியூச்சுவல் பண்ட்ஸ் விற்பதற்கும் மத்திய அரசிடம் அனுமதி கோரலாம் என்ற ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அரசு ஒரு முடிவு எடுத்ததற்குப் பிறகு அதற்கான அனுமதியை மத்திய அரசிடமிருந்து பெற்று நாமும் மத்திய அரசைப் போலவே பொது நிதி நிறுவனங்களில் பங்கை விற்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்வரிசையில் உள்ள மாண்புமிகு இரண்டு உறுப்பினர்களும் இப்படி இடம் மாறி உட்கார்ந்து கேள்வி நேரத்தில் பேசிக்கொண்டிருக்கக் கூடாது. ரொம்பப் பொறுப்பான உறுப்பினர்கள்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எந்தெந்த பொது நிறுவனங்களில் பங்குகளை விற்க மத்திய அரசிடம் அனுமதி கோரியுள்ளது? ஏற்கெனவே வேறு மாநில அரசுகள் ஏதாவது பங்கு மார்க்கெட்டில் இத்தகைய மியூச்சுவல் பண்ட்ஸ் மூலமாக நுழைந்துள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய பங்கு தொகைகள் எந்த அளவுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் தமிழக அரசைப் பொறுத்தவரையில் சில பங்குகளை விற்பனை செய்வதற்கு அனுமதி கோரலாம் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். அதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. பரிசீலித்ததற்குப் பிறகு எந்தெந்த பொது நிறுவனங்களினுடைய பங்குகளை எந்த அளவுக்கு விற்கலாம் என்று முடிவு செய்ததற்குப் பிறகு மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று நிறைவேற்றப்படும். அப்போது வேண்டுமானால் எந்த நிறுவனங்களில், எவ்வளவு பங்குகள் விற்பனைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தைச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த பங்கு நிறுவனங்கள் அதாவது ஷேர் மார்க்கெட்டினுடைய பத்திரங்கள் மின்னல் வேகத்தில் விற்றுக்கொண்டிருக்கின்றன. பல பேர் இன்றைக்கு இதை வியாபாரமாக வைத்திருக்கிறார்கள். காரணம் தனியார் நிறுவனங்களுக்கு அதிகமாக லாபம் ஈட்டித் தரக்கூடிய வகையில் இது இருப்பதால், இந்த பங்கு மார்க்கெட்டினுடைய தொகை அதாவது மதிப்பு அதிகமாகிக் கொண்டே போகிறது. அதனால் நிறையபேர் போட்டிப் போட்டுக் கொண்டு வாங்குகிறார்கள். நம்முடைய அரசு நிறுவனங்கள் பல லாபத்தில் இயங்காமல் அப்படியே லாபத்தில் இயங்கினாலும் கொஞ்சம் லாபத்தோடு இயங்குகிற ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசு பங்கு மார்க்கெட்டில் விற்கும்போது அதிகமாக போட்டி இருக்குமா என்பதை அரசு அறியுமா? அப்படியானால் லாபத்தை அதிகமாக ஈட்டுவதற்கு நிறுவனங்களுக்கு ஏதாவது சிறப்புத் திட்டத்தை அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் பங்கு மார்க்கெட் நிலைமை என்பது இப்பொழுது ஓரளவுக்கு சாதகமாக இருக்கிற காரணத்தினால்தான் அரசு பல பொது நிறுவனங்களில் பங்குத் தொகைகளை அதிகமாக போட்டிருப்பதால் இந்த நேரத்தில் நாமும் பங்குகளை விற்பனை செய்கின்ற சூழ்நிலை ஏற்பட்டால் அரசினுடைய நிறுவனங்களுக்கு அதிகத் தொகை கிடைக்கக்கூடும் என்ற இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் மத்திய அரசு விற்கக் கூடிய அதிகமான அளவுக்கு லாபம் ஈட்டித் தரக்கூடிய அத்தகைய பங்குகளை விற்பனை செய்வதற்கு முடிவு செய்திருக்கிறது. தமிழகத்திலே அரசின் சார்பிலே இருக்கின்ற சில பல பொது நிறுவனங்களில் சில லாபம் தரத்தக்கனவாக அமைந்திருக்கின்றன. சில நஷ்டத்திலே இயங்குகின்றனவாய் இருக்கின்றன. பங்கு மார்க்கெட்டிலே எந்தெந்தப் பங்குகள் விற்பனை ஆகுமோ, எதனால் அதிக லாபம் கிடைக்குமோ அவற்றைத்தான் விற்க இயலும். ஏனென்றால் நஷ்டத்தில் இருக்கின்ற நிறுவனங்களின் பங்குகளை யாரும் வாங்க முன்வர மாட்டார்கள். அதையெல்லாம் ஆராய்ந்து பார்த்துதான் முடிவெடுக்க வேண்டும். அந்த முறையிலேதான் அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 417, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.